# கிளிநொச்சி பூநகரிக் குளத்தில் சூரிய மின்சக்தி உற்பத்தி ஒப்பந்தங்கள் பற்றி மக்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்!

## அனுரகுமார திசாநாயக்க எம்.பி. மன்றில் அழுத்தம்



கிளிநொச்சி பூநகரிக் குளத்தில் சூரிய மின்சக்தி உற்பத்தியை மேற்கொள்வது குறித்த முழுமையான விளக்கத்தினை மக்களுக்கு வழங்க வேண்டுமென தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இன்றைய நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி பூநகரிக் குளத்திலிருந்து 700 மெகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தியை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த மின் உற்பத்தியை மேற்கொண்டு நமக்கு மின்சாரம் வழங்குவதற்காக நாம் மின்சார கொள்முதல் ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட வேண்டும்.


இவ்வாறு அவர்கள் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை நாம் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் ஒப்பந்தத்தின் பெறுமதி எவ்வளவு என்பதை அறிந்து கொள்ள விரும்புகின்றேன், என்று அவர் தெரிவித்தார். 2➤

மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 25 செவ்வாய்க்கிழமை 12.12.2023 கதிர் 132

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

## வரி செலுத்தக்கூடியவர்களிடம் இருந்தே அரசாங்கம் வரியை அறவிட வேண்டும்

### எரான் விக்ரமரத்ன எம்.பி. கருத்து



உணவின்றி இருப்பவர்களிடம் வரியை அறவிடுவதற்குப் பதிலாக வரி செலுத்தக்கூடியவர்களிடம் இருந்து வரியை அறவிட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

இன்று நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், அரச வருமானம் அவசியம் என்றாலும் பணவீக்கச் சுமையை சாதாரண மக்களே எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட்டினார்.

எனவே, அரச வருமானம் 45 வீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அதில் 56 வீதமான வருமானத்தை வற் வரி மூலம் பெற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

சட்டமூலம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் அவசியம் என்ற போதும் வற் வரிச் சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சிகளுக்கு கருத்து தெரிவிக்க அரசாங்கம் சந்தர்ப்பம் வழங்கவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (04)

## கிளிநொச்சி பூநகரிக் குளத்தின் மேல் சூரிய மின்சக்தித் திட்டத்துக்கு அனுமதி

கிளிநொச்சி - பூநகரிக் குளத்தின் மேற்பரப்பில் சூரிய மின்சக்தித் திட்டத்தை நிறுவுவதற்காக அவுஸ்திரேலியாவுடன் மின் கொள்முதல் ஒப்பந்தத்தை எட்டுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பூநகரி குளத்திலிருந்து புதிய கிளிநொச்சி உப மின் நிலையம் வரை தேவையான மின்கடத்திக் கட்டமைப்பை நிர்மாணித்தல் உள்ளிட்ட 100 வீத மின்கலவலுச் சக்திக் காப்புக் கட்டமைப்புடனான 700 மெகாவாட் சூரிய மின்சக்தி மின்னுற்பத்தி நிலையத்தை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக யுனைற்றட் சோலர் எனர்ஜி நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவை கொள்கை ரீதியில் ஏற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 2➤

## கந்தக்காடு முகாமில் இருந்து தப்பி ஓடிய 130 பேரும் கைது!

வெலிகந்தை கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து தப்பியோடிய 130 கைதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் நேற்று மாலை பாதுகாப்பு வேலியை உடைத்து 50 கைதிகள் தப்பி ஓடியதையடுத்து அவர்களை பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து அவர்களைத் தேடிக் கைது செய்தனர். 2➤

## இளைஞர் சமுதாயத்தை விவசாயத்தின் பக்கம் ஈர்க்க நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

### விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



இளைஞர் சமுதாயத்தை விவசாயத்தின் பக்கம் ஈர்க்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இளைஞர்கள் விவசாயத்தை விட்டுத் தொலைவாக விலகியுள்ளமை எமக்குள்ள பாரிய 2➤

## உலகத் தமிழர் பேரவையினர் சம்பந்தனையும் சந்தித்தனர்



இலங்கைக்கு வந்துள்ள உலகத் தமிழர் பேரவையின் தலைவர் சுரேன் சுரேந்திரன் உள்ளிட்ட குழுவினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்டவர்களை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

உலகத் தமிழர் பேரவையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, அதன் தலைவரான ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த சுரேன் சுரேந்திரன், 2➤

## ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தாவிட்டால் நாடு மீண்டும் இருளில் மூழ்கும் அபாயம் காணப்படுகிறது!

### தொழிநுட்பப் பொறியியலாளர்கள், அதிகாரிகளின் ஒன்றியம்

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படாவிட்டால் நாடு மீண்டும் இருளில் மூழ்கும் என இலங்கை மின்சார சபையின் தொழிநுட்பப் பொறியியலாளர்கள் மற்றும் அதிகாரிகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு நாடளாவிய ரீதியில் திடீரென மின் தடை ஏற்பட்டது. மின் விநியோகப் பாதை அமைப்பில் ஏற்பட்ட மின்னல் தாக்கம் காரணமாக இந்த நிலை ஏற்பட்டதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

ஆயினும், இதற்கு முன்னரே மின்சார விநியோகப் பாதை முறைமையை புனரமைக்கப்பட வேண்டுமென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு முன்னர் பரிந்துரைத்திருந்ததாக இலங்கை 2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# திருத்திய பெறுமதி சேர் வரிச் சட்டம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

திருத்தியமைக்கப்பட்ட பெறுமதி சேர் வரிச் சட்டத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் அதன் பின்னர் நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வரைவாளர்களால் திருத்தப்பட்ட பெறுமதி சேர் வரிச் சட்டத்திற்கு சட்டமா அதிபரின் அனுமதியும் கிடைத்துள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தை திருத்துவதற்கு ஒக்டோபர் 30 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சர்கள் குழு கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அதன்படி, 2024 ஜனவரி முதல், வரிக்கு உட்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பை வருடத்திற்கு 80 மில்லியன் ரூபாவிலிருந்து 60 மில்லியன் ரூபாவாகக் குறைப்பதற்காக எல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திருத்தச் சட்டத்தின் மூலம் பெறுமதி சேர் வரியை 15 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (04)

## அரிசியின் விலை அதிகரிப்பு நுகர்வோர் ஆதங்கம்!



அரிசி விநியோகஸ்தர்கள் ஒரு கிலோ சம்பா அரிசியின் விலையை 30 ரூபாவினால் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இலங்கையின் பிரதான அரிசி நிறுவனம் ஒன்று கிலோ ஒன்றுக்கு 230 ரூபாவாக இருந்த சம்பா அரிசியின் விலையை 260 ரூபாவாக உயர்த்தியுள்ளதாக நுகர்வோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஒரு கிலோ சம்பா அரிசியின் விலையை மற்றுமொரு நிறுவனம் 245 ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இந்த நிறுவனங்களுக்கு தமது எண்ணப்படி விலையை உயர்த்த வாய்ப்பு அளிக்கப்பட்டால், பண்டிகைக் காலம் முடிவடைவதற்குள் சம்பா அரிசியின் விலை கிலோ 300 ரூபாவை நெருங்கிவிடும் எனவும் நுகர்வோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

## ஆணைக்குழுவின் பரிந்துரைகளை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்சார சபையின் தொழிநுட்ப பொறியியலாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் நந்தன உதயகுமார தெரிவித்துள்ளார்.

ஆனால், அந்தப் பரிந்துரைகள் இதுவரை அமல்படுத்தப்படவில்லை என்றும் குறித்த பரிந்துரைகள் அமுல்படுத்தப்படாவிட்டால் நாடு மீண்டும் இருளில் மூழ்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை, எதிர்காலத்தில் மின் கட்டணத்தைக் குறைப்பது மற்றும் மின்சாரக் கட்டணத்தை நிர்ணயிக்கும் புதிய முறை தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தலைமையில் இன்று நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (04)

## உலகத் தமிழர் பேரவையினர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவான் பவகுகன், வேலுப பிள்ளை குகனேந்திரன், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த கலாநிதி கண்ணப்பர் முகுந்தன், பிரகாஷ் ராஜசுந்தரம், கனடாவிலிருந்து ராஜ் தவரத்னசிங்கம், அமெரிக்காவிலிருந்து கலாநிதி ஜெயராஜா ஆகியோர் இலங்கைக்கு வந்துள்ளனர்.இந்தக் குழுவினர் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்டவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கொழும்பில் அமைந்துள்ள சம்பந்தரின் இல்லத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மற்றும் பௌத்த மதகுருமார்களும் இதில் இணைந்திருந்தனர்.

இதன்போது நாட்டில் சிறுபான்மையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அரசியல் தீர்வு, புலம்பெயர் மக்களின் முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டுவருவது உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (02)

## இளைஞர் சமுதாயத்தை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினையாகும். வருமானம் போதாமை உட்பட இன்னும் பல்வேறு காரணங்களினால் இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதில்லை.

எனவே. அவர்களை விவசாயத்தின் பக்கம் ஈர்க்க அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். இதற்காக விவசாயத்தை நவீனமயப்படுத்தும் பணிகளை மேலும் வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அனைத்துத் துறைகளினதும் ஒத்துழைப்புடனும் தற்போது எமது அமைச்சு முன்னெடுத்த வேலைத் திட்டங்கள் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை கண்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு 4 வகையான பயிர்களை முதன்மைப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

நெல் தற்போது வெற்றிகரமான நிலையை அடைந்துள்ளது. அதனுடன் சோளம், மிளகாய், உருளைக் கிழங்கு ஆகியவற்றைப் பயிரிடுவதற்கு மக்களைத் தூண்டுவதற்கு எதிர்பார்த்துள்ளோம். அதற்காக நாம் ஏற்கனவே ஒரு வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

கடந்த காலங்களில் முட்டை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அது தொடர்பிலும் நாம் விசேட வேலைத்திட்டமொன்றை தயாரித்துள்ளோம். அடுத்த வருடம் முதல் முட்டை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது.

அதேபோன்று, கோழி இறைச்சியை இறக்குமதி செய்ய அனுமதி கோரப்பட்டாலும் கூட நாம் அதற்கு அனுமதி வழங்கவில்லை, எனவும் அவர் தெரிவித்துள்ளார். (04)

## கந்தக்காடு முகாமில் இருந்து ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தொடர்ந்து அன்றைய தினம் இரவு 7 மணியளவில் 80 பேர் மீண்டும் பாதுகாப்பு வேலியை உடைத்து தப்பி ஓடிய நிலையில் இரவிரவாக இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து, தப்பி ஓடிய 130 பேரையும் கைது செய்துள்ளனர்

இதில் கைது செய்யப்பட்டவர்கள் தங்களுக்கு புனர்வாழ்வு நிலையத்தில் கட்டுப்பாடுகள் அதிகம் என்றும், எனவே இங்கு இருக்கமுடியாது எனவும், தங்களைச் சிறைச்சாலையில் அடைக்குமாறும் கோரியே அங்கிருந்து தப்பி ஓட முயற்சித்ததாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (04)

## கிளிநொச்சி பூநகரிக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம், கருத்திட்டமுன்மொழிவு மதிப்பீடு மற்றும் வலுசக்தியை கொள்வனவு செய்யும் கட்டணத்தை தீர்மானிப்பதற்காக அமைச்சரவைக்குப் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை உடன்பாட்டு குழுவை நியமிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

அதற்கமைய, பேச்சுவார்த்தை உடன்பாட்டு குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் யுனைற்றட் சோலர் எனர்ஜி நிறுவனத்துடன் உத்தேச கருத்திட்டத்தை அமுல்படுத்துதல் மற்றும் அதற்குரிய மின்சாரத்தைக் கொள்வனவு செய்யும் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்காக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (04)

## கிளிநொச்சி பூநகரிக் குளத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஒப்பந்தத்திற்கு அமைவாக ஓர் அலகு மின்சாரத்தின் பெறுமதி 50 ரூபாவாகும்.

சூரிய மின் உற்பத்தி நம் நாட்டில் அதிகரித்தால் மின்சார கட்டணங்கள் குறைவடையும் என்ற பாரிய எதிர்பார்ப்பு ஒன்று நம் நாட்டு மக்களுக்கு இருக்கின்றது.

ஆகவே, இது தொடர்பில் தெளிவுபடுத்துங்கள். அதே நேரம் இவற்றுக்கு வெளிப்படையான விலைமனுக் கோரல்கள் முன்வைக்கப்படுவதில்லை. அனைத்தும் மறைவாகவே முன்னெடுக்கப்படுகின்றன, எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (04)







## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
maalaikkathir@gmail.com

**செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட**
காலைக்கதிர் TV
**காலைக்கதிர் TV YouTube தளம்**

# தென்கிழக்குப் பல்கலை தொழிநுட்பவியல் பீடத்தில் பீடாதிபதி தலைமையில் 3ஆவது சர்வதேச ஆய்வரங்கு



(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் தொழிநுட்பவியல் பீடம் ஏற்பாடு செய்திருந்த “Sustainable economic development through empowerment research on science and technology” எனும் தொனிப்பொருளிலான 3 ஆவது சர்வதேச ஆய்வரங்கு இன்று தொழில்நுட்பவியல் பீடத்தில் நிகழ்நிலையாக இடம்பெற்றது.

தொழிநுட்பவியல் பீட பீடாதிபதி கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் தலைமையில் இடம்பெற்ற இவ் ஆய்வரங்குக்குக்கு பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்கள் கலந்து கொண்டார்.

நிகழ்வின் போது ஆய்வரங்கின் இணைப்பாளர் எஸ்.எல். அப்துல் ஹலிம் வரவேற்புரை நிகழ்த்தியதுடன் நிகழ்வின் பிரதான பேச்சாளர்கள் தொடர்பில் அறிமுக உரையையும் நிகழ்த்தினார்.

பிரதான பேச்சாளர்களாக மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் பேராசிரியர் ஜிஹான் டயஸ் அவர்களும் றுஹுனு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் எமெரிட்டஸ் பேராசிரியர் காமினி சேனநாயக்க அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

ஆய்வரங்கின் செயலாளர் கலாநிதி ஏ.என்.எம் முபாறக் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான குறித்த 3வது சர்வதேச மாநாட்டில்

எட்டு வித்தியாசமான தலைப்புக்களில் 76 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த கட்டுரைகள் திறனாய்வாளர்களினால் உன்னிப்பான முறையில் ஆராயப்பட்டு, அவர்களின் பரிந்துரைகளுக்குப் பின்னர் 35 ஆய்வுக் கட்டுரைகள் பிரசுரத்துக்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மாற்றுத்திறனாளிகளை தொழில் வாய்ப்புக்கு உட்புகுத்தல் தொடர்பான முன்னேற்ற கூட்டம்



(ஹஸ்பர்)

மாற்றுதிறனாளிகளை தொழில் வாய்ப்புக்கு உட்புகுத்தல் தொடர்பான முன்னேற்ற கூட்டமானது மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி அவர்களின் தலைமையில் இன்று மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

ஈஎஸ்பிடியின் முகாமையாளர் மற்றும் அதன் உத்தியோகத்தர்கள், சமூக சேவைகள் மாவட்ட இணைப்பாளர் மற்றும் மனித வள உத்தியோகத்தருடன் இக்கலந்துரையாடல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் 2023 ம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் 8 சிறந்த திட்டங்கள் மூதூர், கிண்ணியா, தம்பலகாமம், பட்டிணமும் சூழலும் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டது. 17 மாவட்டங்களில் திருகோணமலை மாவட்டம் நான்காம் இடத்திலுள்ளமை சிறப்பம்சமாகும். மேலும் 2024, 2025 காலப்பகுதியில் திருகோணமலை மாவட்டத்தை முதலாம் இடத்திற்கு கொண்டு செல்வதிலுள்ள தடைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

## திகழி பாடசாலை மாணவனின் முன்மாதிரியான செயற்பாடு



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி திகழி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் திருத்தியமைக்கப்பட்ட பிரதான மண்டபத்திற்கு தேவைப்பாடாக காணப்பட்ட 18 மின்விசிறி மற்றும் 250 கதிரைகள் சம்மந்தமாக செய்திகள் வெளி வந்தது முதல் பாடசாலையின் பழைய மாணவர்களால் மின்விசிறிகள் மற்றும் கதிரைகள் பாடசாலைக்கு கிடைக்கப் பெறுவதாக பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.ஏ றஸ்ஸாக் தெரிவித்தார்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் பாடசாலையில் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவன் அஸீப், பிரதான மண்டபத்தின் தேவைப்பாடாக உள்ள கதிரைகளில் ஒன்றை அதிபரிடம் கையளித்து மாணவர் சமூகத்திற்கே ஒரு முன்மாதிரியாக செயற்பட்டமை வரவேற்கதக்க ஒரு செயற்பாடாகும் என அதிபர் தெரிவித்தார்.

இவ்வாறு ஒவ்வொரு மாணவனும் தான் கல்வி கற்கும் பாடசாலையின் அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் தனது ஒத்துழைப்பை வழங்கும்போது அந்தப் பாடசாலை சிறந்ததொரு பாடசாலையாக காணப்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என தெரிவித்ததுடன் அந்த அஸீப் என்ற மாணவனுக்கு தனது பாடசாலை நிர்வாகம் சார்பாக நன்றிகளையும் தெரிவித்தார்.



# ஜம்மு காஷ்மீர் பகுதிக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து தொடர்பான இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு - பாகிஸ்தான் அமைச்சர் கருத்து



இந்திய மத்திய அரசு ஜம்மு காஷ்மீர் பகுதிக்கான சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்தது தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இந்நிலையில், அது குறித்து பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜலீல் அப்பாஸ் ஜிலானி, தனது கருத்தை தெரிவித்துள்ளார்.

கடந்த 2019 ஒகஸ்டில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய 370 ஆவது சட்டப்பிரிவை இந்திய மத்திய அரசு ரத்துச் செய்தது. அதனை எதிர்த்து பல்வேறு தரப்பினாலும் உச்ச நீதிமன்றத்தில் வழக்கும் தொடுக்கப்பட்டது.

இந்த வழக்கில் நேற்று ஐந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வு தீர்ப்பு வழங்கியது. அதில் இந்திய மத்திய அரசின் முடிவினை ஒருமனதாக உறுதி செய்தது நீதிமன்றம். இது குறித்து பல்வேறு தரப்பினரம் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

சிறப்பு அந்தஸ்தை ரத்துச் செய்த நீதிமன்றத் தீர்ப்பில் சட்ட ரீதியான மதிப்பு ஏதும் இல்லை. 2019இல் ஒரு தலைப் பட்சமாக சட்டம் இயற்றிய இந்தியாவின் இந்த நகர்வை சர்வதேசச் சட்ட விதிகள் அங்கீகரிக்காது.

ஜம்மு காஷ்மீர் விவகாரத்தில் முடிவுகள், ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானம் மற்றும் காஷ்மீர் மக்களின் விருப்பத்தின் பேரில் எடுக்கப்பட வேண்டும். அதனால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஆதிக்கத்தை பாகிஸ்தான் ஏற்கவில்லை. சிறப்பு அந்தஸ்து ரத்து காரணமாக காஷ்மீர் மக்கள் தங்கள் சொந்த நிலத்தில் அதிகாரம் இழந்த சமூகமாக இருக்கின்றனர், என அவர் தெரிவித்துள்ளார். (04)

# ஆஜென்ரீனாவின் அதிபராக ஜேவியர் மிலி பதவியேற்றார்



ஆஜென்ரீனா நாட்டின் அதிபராக பொருளாதார நிபுணரான ஜேவியர் மிலி பதவியேற்றுள்ளார்.

ஆஜென்ரீனா கடுமையான பொருளாதாரா நெருக்கடிக்கு ஆளாகியுள்ள நிலையில் நடந்த தேர்தலில் ஜேவியர் அபார வெற்றியைப் பெற்றுள்ளார்.

பதவியேற்புக்குப் பின்னர் உரையாற்றிய அதிபர் ஜேவியர் மிலி, இறைவன் மீதும், என் தேசத்தின் மீதும் ஆணையாக நான் இந்த அதிபர் பதவியில் உண்மையுடன், தேசபக்தியுடன் செயல்படுவேன். முந்தைய ஆட்சியாளர்கள் கஜானாவை காலிசெய்துவிட்டுச் சென்றுள்ளனர். அவர்களின் நடவடிக்கையால் நாடு அதிதீவிர பணவீக்கத்தை சந்தித்துள்ளது. அரசாங்கத்திடம் பணம் இல்லை. நிதிச் சீர்திருத்தந்தான் இப்போதைய தேவை. ஆனா,ல் அதன் பலன்கள் அரசாங்கத்துக்கு வர வேண்டும். தனியார் துறைகள் ஆதாயமடையும் வகையில் இருக்கும்படியான சீர்திருத்தங்களாக இருந்து விடக் கூடாது, என்றார்.

ஆஜென்ரீனாவின் பணவீக்கம் மூன்று இலக்கத்தில் உள்ளது. அங்கு தற்போது 40 சதவீத மக்கள் வறுமையில் உள்ளனர். 1.8 கோடி பேர் தங்களின் தனிப்பட்ட தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய இயலாத நிலையில் உள்ளனர். 10 சதவீத மக்கள் உணவுக்குக்கூட வழியிலாது மோசமான வறுமையில் உள்ளனர். நாட்டில் வேலைவாய்ப்பின்மை 6.2 சதவீதமாக

கடுமையான பணவீக்கம், நாணய மதிப்பு சரிவு என ஆஜென்ரீனா கடுமையான நிதிச் சுழலில் சிக்கியுள்ள சூழலில் ஜேவியரின் பதவியேற்பு அந்நாட்டு மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜேவியருக்குக் கடுமையான சவால்கள் காத்திருக்கின்றன என்று பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (04)

# 13 ஆண்டுகளுக்குப் பின்னர் சிக்கிம் சென்ற தலாய் லாமா

திபெத் புத்த மதத் தலைவர் தலாய் லாமா மூன்று நாள் பயணமாக இந்தியாவின் சிக்கிம் மாநிலத்துக்கு நேற்றுக் காலை சென்றுள்ளார். அவரை அம்மாநில முதல்வர் பிரேம் சிங் தமாங் வரவேற்றார்.

அதோடு, பல்வேறு புத்த மதத் துறவிகள், அவருக்குப் புத்த மத வழக்கப்படி ஷெர்பாங் பாடலைப் பாடி, நடனமாடிச் சிறப்பாக வரவேற்பு கொடுத்தனர். தலாய் லாமாவைக் காண நெடுஞ்சாலையின் இருபுறமும் நூற்றுக்கணக்கான மக்கள் வரிசையில் நின்று கொண்டிருந்தனர்.

87 வயதான தலாய் லாமா, இந்தியா மற்றும் சீன எல்லையிலிருந்து சுமார் 50 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பால்ஜோர் மைதானத்தில் இன்று போதனை செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. தலாய் லாமாவிடம் ஆசி பெற இந்நிகழ்ச்சியில் சுமார் 40,000 பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என்று கூறப்பட்டது.



தலாய் லாமா கடைசியாக 2010 இல் சிக்கிம் மாநிலத்துக்குச் சென்றிருந்தார். தற்போது அவர் காங்டாக் மாவட்டத்தில் உள்ள சிம்மிக் காம்டாங் தொகுதியில் கர்மபா பார்க் திட்டத்தின் அடிக்கல்லை நாட்டுவார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிக்கிம் முதல்வர் பிரேம் சிங் தமாங் இது குறித்து எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில், தலாய் லாமாவுக்கு என்னுடைய அன்பான வரவேற்பை வழங்கி, மரியாதை செலுத்தியதைப் பாக்கியமாகக் கருதுகிறேன். அவருடைய ஆழ்ந்த போதனைகள் மற்றும் முன்மாதிரியான வழிகாட்டுதல்கள் நம் இதயத்தையும், மனதையும் வளப்படுத்துகின்றன. ஆசீர்வதிக்கப்பட்ட சிக்கிம் பூமிக்கு, அவரை வரவேற்கிறோம், என்று பதிவிட்டுள்ளார். (04)

# கொரோவால் உயிரிழந்த குடும்பங்களிடம் பிரித்தானியப் பிரதமர் ரிஷி சுனக் மன்னிப்பு

கொரோனா பேரிடர் காலத்தில் முழு முடக்கம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய முடிவுகளை அப்போதைய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் எடுத்தது குறித்த விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த விசாரணையில் தற்போதைய பிரதமர் ரிஷி சுனக் நேற்று ஆஜராகி விளக்கமளித்தார்.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த பொரிஸ் ஜோன்சன் எடுத்த பல்வேறு நடவடிக்கைகளுக்கு ரிஷி சுனக் ஆதரவு தெரிவித்திருந்தார்.

கொரோனா பேரிடர் காலத்தில் பிரித்தானிய அரசு எடுத்த கடுமையான முடிவுகளால் பாதிக்கப்பட்டவர்களிடமும், கொரோனாவால் சொந்தங்களை இழந்த குடும்பத்தினரிடமும் மன்னிப்புக் கோருகிறேன்.

கொரோனா காலக்கட்டத்தில் பல்வேறு படிப்பினைகளைக் கற்றுக்கொண்டுள்ளோம். அது வருங் காலத்தில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள உதவும், என்றும் ரிஷி சுனக் தெரிவித்தார். (04)

# உக்ரைன் ராணுவத்திலும் நேபாள வீரர்கள் பிரதமர் கமல் தஹல் பிரசண்டா தகவல்

ரஷ்யாவில் மட்டுமின்றி உக்ரைன் ராணுவத்திலும் தங்கள் நாட்டைச் சேர்ந்த வீரர்கள் இருப்பதாக நேபாள பிரதமர் கமல் தஹல் பிரசண்டா கூறியுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று தகவல் வழங்கியபோது,

ரஷ்ய ராணுவத்தில் 200 க்கும் மேற்பட்ட நேபாள நாட்டவர்கள் பணியாற்றி வருவதாக எங்களுக்கு ஏற்கெனவே தகவல்கள் வந்தன. ஆனால், ரஷ்யாவுக்காக மட்டுமின்றி உக்ரைன் ராணுவத்திலும் நேபாளத்தைச் சேர்ந்தவர்கள் பணியாற்றி வருவது தற்போது தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான கூடுதல் உண்மைகளை அறிவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம், என்றார்.

இதற்கிடையே, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளின் ராணுவங்களில் பணியாற்றுவதற்காக தங்கள் நாட்டவர்களை அரசு சார்பில் அனுப்புவதில்லை என்றும் வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்லும் நேபாளிகள் தாங்களாகவே அந்த நாடுகளின் ராணுவத்தில் இணைவதாகவும் நேபாள அரசு விளக்கம் அளித்துள்ளது.

முன்னதாக, உக்ரைன் போரில் ரஷ்யாவுக்காகச் சண்டையிட்ட நேபாள நாட்டைச் சேர்ந்த 6 பேர் அந்தப் போரில் உயிரிழந்ததாக தகவல் வெளியானது நினைவுகூரத்தக்கது. (04)



# அம்பாறை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமத்தில் 9 ஏ சித்திகள் பெற்ற மாணவிக்கு பாராட்டும் வாழ்த்தும்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அக்கரைப்பற்று கண்ணகி கிராமம் - கண்ணகி மகா வித்தியாலயத்தில் கல்வி-ககும் மாணவியான கவடாபட்டி கிராமத்தில் வசிக்கும் மேரி டுலுக்சிக்கா ரொசேரோ, பாடசாலை வரலாற்றில் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் தோற்றி முதன் முதலாக 9ஏ சித்தி பெற்று பாடசாலைக்கும் கிராமத்தி-ற்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இதனை முன்னிட்டு கவடாபிட்டி கிராமத்தில் கல்விமையத்தை நடாத்தி வருகின்ற லக்சுமிகரங்கள் அமைப்பினர் மாபெரும் வரவேற்பை மாணவிக்கு நிகழ்த்தி வாழ்த்து மடல் கையளித்து பணப்பரிசும் வழங்கி கௌவித்தனர்.

கவாடப்பிட்டி பாலர் பாடசாலை மண்டபத்தில் லக்சுமி கரங்கள் அமைப்பின் இணைப்பாளர் தலைமையில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் பாடசாலை அதி-பர் இராசநாதன் மற்றும் நப்சோ நிறுவனத்தின் கள உத்தியோகத்தர் கோகுலன்,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திவாகரன், சமுர்த்தி அபிவிருத்தி உத்-தியோகத்தர் விஜயபாலா ,மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# மாவடிப்பள்ளி அஷ்ரபில் கசகர்ணம் சஞ்சிகை வெளியீடு





(நூருல் ஹுதா உமர்)

கல்முனைக் கல்வி வலய மாவடிப்பள்ளி கமு. கமு. அல்-அஷ்ரப் மகா வித்தியாலய மாணவர்களின் ஆக்கத் திறனை வெளிப்படுத்தும் முகமாக 2023 தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நேற்று "கசகர்ணம்" எனும் சஞ்சிகை பாடசாலை முதல்வர் வீ. முஹம்மட் ஸம்ஸம் தலைமையில் வெளியிடப்பட்டது.

சஞ்சிகை பொறுப்பாசிரியை சித்தி மசூறா சுகூர்தீனின் நெறிப்படுத்தலில், பாடசாலை பிரதி முதல்வர் ஏ.எல். றஜாப் தீன் அவர்களின் ஆலோசனையின் பேரில் சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மாணவி எம்.என். சஞ்சிதா பர்ஹத் அவர்களை சஞ்சிகை ஆசிரியராகக் கொண்ட பெரும் முயற்சி எனும் அர்த்தம் கொண்ட "கசகர்ணம்" நூல் வெளியீட்டின் இணைப்பாளரான தமிழ் பாட சிரேஷ்ட ஆசிரியர் எம்.ஐ.எம். காஸிம் சஞ்சிகை பற்றிய சிறப்பான நயவுரையை மேற்கொண்டார்.

இச்சஞ்சிகை வெளிவருவதற்கு ஒத்துழைப்பு நல்கிய ஆசிரியைகளான ஏ.கே.எப்.நுஷைறா, திருமதி எஸ். சஹாப்தீன், திருமதி ஏ.எஸ்.எஸ். சமியா மற்றும் திருமதி. ஏ.எல்.எப்.பவாஸா ஆகியோர் தமது முழுமையான பங்க ளிப்புக்களை வழங்கியிருந்தனர். இந்நிகழ்வில் பாடவி தான பிரதியதிபர் எம்.சி.எம். தஸ்தகீர், உதவியதிபர் எஸ்.எம். அஹமட் லெவ்வை ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.




# பழுகாமத்தில் கலப்பின மிளகாய் அறுவடை விழா






(வி.ரி.சகாதேவராஜா)

விவசாய திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கலப்பின செத்தல் மிளகாய் செய்கையின் அறுவடை விழா பழுகாமம் விவசாய போதனாசிரியர் பிரிவுக ளுக்குட்பட்ட பொறுகாமம் கிராமத்தில் இடம்பெற்றது.

பழுகாமம் விவசாய போதனாசிரியர் பிரிவுக்கு பொறுப் பான விவசாய போதனாசிரியர் திருமதி துஷ்யந்தி ஜதீ ஸன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்க ளப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் வீ.பேரின்ப ராஜா தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் எஸ். சித்திரவேல், விவசாய போதனாசிரியர்கள் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் விவசாய பயிலுனர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

எம்.ஐசிஎச் ஹைபிரிட் 1 எனும் மிளகாய் வர்க்கம் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு செத்தல் மிளகாய் உற்பத்தியை ஊக்குவிக்கும் செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக இது இடம்பெற்றது.

சரிவான நிலங்களில் மண்ணரிப்பை தடுத்து மண் வளத்தை அதிகரிக்கும் நோக்குடன் சரிவுக்கு குறுக்காக அணைகள் அமைத்து அதன் மீது தேசிக்கன்றுகளை நடுவதற்கான தேசிக்கன்றுகளும் மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தால் இலவசமாக விவசாயி களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

# எம்.ஏ.ரஹீமாவின் சூல்சோறு சிறுகதைத்தொகுதி கொழும்பு அல் ஹிதாயாவில் வெளியீட்டு விழா



(அஸ்ஹர் இப்றாஹிம்)

எம்.ஏ.ரஹீமாவின் "சூல்சோறு" சிறுகதைத்தொகுதி வெளியீட்டு நிகழ்வு கொழும்பு அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

தமிழ் மாமணி அல் அசூமத் தலைமையில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் அதிபர் எம்.எச் மும்தாஜ் பேகமும், சிறப்பு அதிதியாக மர்ஹூம் எம்.எச். எம் ஷம்ஸ் அவர்களின் புதல்வர் ஷம்ஸ் ஷப்பூக்கும், கௌரவ அதிதியாகளாக திக்வல்லை கமால், மர்ஹூம் எம்.எச். எம் ஷம்ஸ் அவர்களிம் புதல்வரும், தினகரன் பிராந்திய செய்தி ஆசிரியருமான பாஹிம் ஷம்ஸ், மர்ஹூம் இக்பால் அவர்களின் புதல்வி எம் .ஜே.எம் மலீஹா ஆகியோர் கலந்து கொண்டனர். முதல்பிரதியை ஊடகவியலாளர் பாஹிம் ஷம்ஸ் பெற்றுக்கொண்டார்.

நூல் திறன் நோக்கினை பன்முக ஆளுமை அஷ்ரஃப் ஷிஹாப்தீனும், நூலாசிரியர் அறிமுகத்தினை சிரேஷ்ட அறிவிப்பாளர் புர்கான் பீ இஃப்திகாரும், கவி வாழ்தினை திருகோணமலை அஷ்ரஃபா நூர் தீனும், கவிஞர் வாழைத்தோட்டம் எம்.வஸீரும் வழங்கியதோடு நிகழ்ச்சியை கவிஞர் நாச்சியா தீவு பர்வீன் தொகுத்து வழங்கினார்.

# பிரான்ஸில் திருவள்ளுவர் திருவுருவச்சிலை திறந்து வைத்த செந்தில் தொண்டமான்!

(ஹஸ்பர்)

வொரெயால் தமிழ் கலாசார மன்றத்தின் ஏற்பாட்டில் பிரான்ஸில் செர்ஜி நகரில் இடம்பெற்ற திருவள்ளுவர் திரு-வுருவச்சிலை திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துக் கொண்டு திருவள்ளுவர் சிலையை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் செர்ஜி நகர மேயர் ஜியோன் பவுல் ஜீன்ஸ்டன், இந்தியாவின் பாண்டிச்சேரி மாநிலத்தின் அமைச்சர் லக்ஷ்மி நாராயணன், பிரான்ஸிற்கான இந்திய தூதுவர் ஜவீட் அஷ்ரப், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைகழகத் தலைவர் (அயலக கல்வி) டாக்டர் குறிஞ்சி வேந்தன், பிரான்ஸ் நாட்டினதும் பல்வேறுபட்ட நாடுகளையும் சேர்ந்த அரசியல், கலாசார, இலக்கிய பிரமுகர்கள் கலந்துக்கொண்டனர்.



## வாகரையில் மனித உரிமை வாரம் அகம் அமைப்பினால் அனுஷ்டிப்பு



சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அகம் மனிதாபிமான வளநிலையத்தின் ஏற்பாட்டில் வாகரை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாங்கேணி ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் சிவில் அமைப்புக்களினால் இன்று மனித உரிமைகள் வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அகம் நிறுவன சிவில் செயற்பாட்டாளர்களினால் டிசம்பர் 4ஆம் திகதி முதல் 12ஆம் திகதிவரை மனித உரிமைகள் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு ரிஷாட் பதியுதீன் எம்.பி. அண்மையில் விஜயம்



(அஸ்ஹர் ஆதம்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியு-தீன் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு அண்மையில் விஜயம் செய்தார் இதன் போது அங்குள்ள குறைகளை கேட்டறிந்து வைத்தியசாலையின் அபிவிருத்திகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் அசாத் எம் ஹனீபா, வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழு தலைவர் வைத்தியர் இஸ்ஸடீன், திட்டமிடல் பிரிவு வைத்தியர் நியாஸ் சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபை தலைவரும், முன்னாள் அரசாங்க அதிபருமான எம்.ஐ ஹனீபா, வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோருடன் கட்சியின் முக்கியஸ்தர்களான மாஹிர், தாஹீர், அஸ்மி , காதர், றியாஸ் ஆகியோருடன் கட்சியின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலர் இக்கலந்துரையாடலின் போது கலந்துகொண்டனர்.

## யாழ். முட்டாஸ்கடை சந்தியில் மின் விளக்குகள் செயலிழப்பு

### பொதுமக்களுக்குச் சிரமங்கள்

யாழ்ப்பாணம் முட்டாஸ்கடை சந்திப் பகுதியில் பொருத்தப்பட்ட மின் விளக்குகள் செயலிழந்துள்ளதால் அவ்வீதியால் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு வேளைகளில் குறித்த பகுதி இருளாகக் காணப்படுவதைப் பயன்படுத்தும் கொள்ளையர்கள் அவ்வீதியால் பயணிப்போரிடம் வழிப்பறி செய்வதிலும் அங்குள்ள வர்த்தக நிலையங்களில் கொள்ளையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அங்கு மது அருந்திவிட்டு ஒன்று கூடும் விஷமிகள் குழுக்கள், வீதியால் பயணிப்போருடன் முரண்படும் சம்பவங்களும் பதிவாகி வருகின்றன.

இவ்வாறன சம்பவங்களால் அவ்வீதியூடாக பயணிப்போர் மற்றும் அங்குள்ள வியாபார நிலையங்களை நடத்துவோர் இரவு வேளைகளை அச்சத்துடன் கழிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் பொலிஸார் மற்றும் யாழ் மாநகர சபை கவனம் செலுத்தி மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டும் என்று அப்பகுதி மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (01)






## சாய்ந்தமருதில் மு.கா. கிளைகள் புனரமைப்பு விசேட கூட்டம்



(ஏ.எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது பிரதேசத்தில் கல்முனை 23ஆம் வட்டாரத்திற்கான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளைகளை புனரமைப்பு செய்வதற்கான விசேட கூட்டம் கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் அதிஉயர் பீட உறுப்பினருமான கலாநிதி சிராஸ் மீராசாகிப் தலைமையில் திங்கட்கிழமை இரவு அவரது சாய்ந்தமருது இல்ல வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கட்சியின் தவிசாளரும் முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.எல். அப்துல் மஜீட், பிரதிச் செயலாளர் மன்சூர் ஏ.காதர், பிரதி தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, மாவட்ட குழுவின் செயலாளர் ஏ.சி. சமால்தீன், சாய்ந்தமருது அமைப்பாளர் எம்.ஐ.எம். பிர்தௌஸ், மாளிகைக்காடு அமைப்பாளர். எம்.எம்.இஸ்மாயில் உட்பட கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்கள், கட்சிப் பிரமுகர்கள் மற்றும் இளைஞர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது கட்சி யாப்பின் பிரகாரம் 23ஆம் வட்டாரத்திலுள்ள 14,16,17 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்கான நிர்வாக சபைகள் தெரிவு செய்யப்பட்டன.

கட்சியின் வளர்ச்சியில் கிளை நிர்வாகிகளின் வகிபாகம் இன்றியமையாதது என்றும் தனிப்பட்ட நலன்களுக்கு அப்பால் அனைவரும் சமூக நலன் கருதி அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டும் என்றும் தவிசாளர் அப்துல் மஜீத் வலியுறுத்தினார்.

## மீன்பிடி உபகரணங்கள் வெருகலில் கையளிப்பு



(ஹஸ்பர்)

திருகோணமலை வெருகல்பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையில் இலங்கைத்துறை முகத்துவாரம் கிராமசேவகர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு தலா இரண்டு லட்சம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் நேற்று வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ. அனஸ் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது. மீனவர்களின் மீன்பிடி துறையையும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் குறித்த மீன் பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

இதன்போது வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் அதிகாரிகள், துறைசார் உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.12.2023இல் வெளியிடப்பெற்றது.